### மாநில நிதி சுயாட்சியை பறிக்கும் ஒன்றிய அரசின் சுரங்க– கனிம வள திருத்தச் சட்டம்

# தி.மு. கழகம் வன்மையாக கண்டித்த நிலையில் வாய்மூடி நின்ற ஆங்கில நாளேடு!

## முதல்வர் விஜய்க்கு ஆதரவாக செய்தி வெளியீடு – இ.பரந்தாமன் கண்டன அறிக்கை!

சென்னை, ஆக. 28-

THE NEW INDIAN EXPRESS நாளிதழ் வெளியிட்ட தவறான செய்தியைக் சுட்டிக்காட்டி கழக சட்டத் துறை இணைச்செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ. பரந்தாமன் அவர்களது அறிக்கை வருமாறு:

நேற்று (27.08.2026) THE NEW INDIAN EXPRESS நாளிதழில் ஒன்றிய அரசு நிறைவேற்றியுள்ள சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) திருத்தச் சட்டம்-2026 தொடர்பாக, முதல்வர் விஜய் ஒன்றிய அரசிற்கு எதிர்ப்பு தெரிவித்து கடிதம் எழுதியுள்ளதாக கிடைத்த 'தகவல்' அடிப்படையில் ஒரு செய்தியை வெளியிட்டுள்ளனர். அரசின் அதிகாரப் பூர்வக் கடிதம் இதுவரை வெளியாகாத நிலையில் 'SOURCE' கள் சொன்ன தகவலை வைத்து செய்தி வெளியிட்டுள்ளனர். ஆனால் அதில் கூடுதலாக இந்த சட்ட திருத்தத்தை திமுக எதிர்க்கவில்லை என்ற பொய்யான ஒரு தகவல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் திமுக சார்பில் 12/08/2026 அன்று மேனாள் அமைச்சர் திரு தங்கம் தென்னரசு அவர்கள் ஒன்றிய பாஜக அரசின் இந்த சட்ட திருத்தம் 'நிதிக் கூட்டாட்சியின் மீதான நேரடி தாக்குதல்' இது என்று கண்டித்தார். 13/08/2026 அன்று திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் 'இது மாநில உரிமைகள் மீதான நேரடித் தாக்குதல் & மாநிலங்களின் நிதி சுயாட்சியை பறிக்கும் மசோதா' என்று வெளிப்படையாக கண்டித்தார்.



மாநிலங்களவை திமுக குழுத் தலைவர் திருச்சி சிவா அவர்களும் , மாநிலங்களவை உறுப்பினர் எஸ். ஆர். சிவலிங்கம் அவர்களும் இந்த மசோதாவை எதிர்த்து நாடாளு மன்றத்தில் பேசியுள்ளனர்.

14/08/2026 அன்று திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் 'இந்த சட்டம் தொடர்பாக முதலமைச்சர் விஜய் ஏன் எதுவும் பேசாமல் அமைதி காக்கிறார்' என்று கேள்வி எழுப்பிய பிறகு தான் தவெக சார்பில் முதல்வர் விஜய் ஒரு கடிதம் எழுதி உள்ளார் என தகவல் சொல்லப்பட்டது. அப்போதும் அதுபற்றிய அரசு கடிதத்தை வெளியிடவில்லை. திமுக கேள்வி எழுப்பும் வரை சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) திருத்தச் சட்டம், 2026 பற்றி வாய்திறக்க கூட திராணியற்று இருந்தது தவெக அரசு.

உண்மைகள் இவ்வாறாக இருக்க வெறும் தகவல் அடிப்படையில் முதல்வர் விஜய் எதிர்த்ததாக ஒரு செய்தியை வெளியிடுவதில் அக்கறை காட்டி இருக்கும் THE NEW INDIAN EXPRESS பத்திரிகை, நாடாளு மன்றத்திலும் சரி , ஊடகம், பத்திரிகைகளின் வாயிலாகவும் சரி வெளிப்படையாக ஒன்றிய அரசின் இந்த சட்டத்தை திமுக எதிர்த்த போதும், எதிர்க்கவில்லை என்ற வகையில் தவறான செய்தி வெளிட வேண்டிய தேவை என்ன.? அழுத்தம் என்ன.?

இந்த செய்தியானது THE NEW INDIAN EXPRESS நாளிதழ் மீதான நம்பிக்கையை மக்கள் மத்தியில் கேள்விக் குறியாக்குகிறது. ஆகவே சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) திருத்தச் சட்டம், 2026 சார்ந்து தற்போது வெளியிடப்பட்டுள்ள இந்த தவறான செய்திக்கு மறுப்பு தெரிவிப்பதோடு, திமுக வின் உண்மையான நிலைப்பாட்டை பதிவு செய்வது தான் ஊடக அறமாக இருக்கும்.

இவ்வாறு இ.பரந்தாமன் தனது அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

---

### மயிலை த.வேலு தலைமை! அன்பகம் கலை – நந்தனம் கி.மதி முன்னிலை!

# மயிலை கிழக்குப் பகுதிச் செயலாளர் எஸ்.முரளி - கீதா இல்லத் திருமண வரவேற்பு விழா!

## சட்டமன்ற எதிர்க்கட்சித்தலைவர் உதயநிதி ஸ்டாலின் – கழக முன்னணியினர் வாழ்த்து!

சென்னை, ஆக. 28-

சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை கிழக்குப் பகுதிச் செயலாளர் எஸ்.முரளி - 171வது வார்டு மாமன்ற உறுப்பினர் கீதா முரளி ஆகியோரின் மகள் மு.கிருத்திகாவுக்கும், சந்திரமௌலி - திருமதி.கலா ஆகியோரின் மகன் ச.விஸ்வவாகீஷ்க்கும் திருமண வரவேற்பு விழா 31.08.2026 திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு மேல் ஸ்ரீ ராமச் சந்திரா கன்வென்ஷன் சென்டர், திருவான்மியூரில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு மாவட்டச் செயலாளர் மயிலை த. வேலு தலைமை ஏற்கிறார்.

கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, மயிலை மேற்கு பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மணவிழா வரவேற்பில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் - கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகிறார்.

பகுதி கழக நிர்வாகிகள் எஸ்.முனுசாமி, சீமென் கோ.சேகர், எல்.உதயகுமார், பி.எல்.தாஸ், ஏ. குமாரி, வட்டச் செயலாளர்கள் ஏ.தாஸ், அ.தவநேசன், வி.வெற்றிவேல், கோ.கண்ணன், துரை பார்த்திபன், பா.பொன்னுசாமி வரவேற்புரையாற்றுகின்றனர்.

இதில் கழக பொதுச் செயலாளர் துரைமுருகன், டி.ஆர்.பாலு எம்.பி., கே. என்.நேரு எம்.எல்.ஏ., ஐ. பெரியசாமி எம்.எல்.ஏ., திருச்சி என்.சிவா எம்.பி., ஆ.ராசா எம்.பி., கனிமொழி கருணாநிதி எம்.பி., அந்தியூர் ப.செல்வராஜ், மு.பொ.சாமிநாதன், எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி.,. அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர் பாபு எம்.எல்.ஏ., எஸ்.எஸ். சிவசங்கரன் எம்.எல்.ஏ., கோ.வி.செழியன் எம்.எல்.ஏ., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, டி.கே.எஸ்.இளங்கோவன், தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., தயாநிதிமாறன் எம்.பி., எஸ். ஆஸ்டின் எம்.எல்.ஏ., ப. தாயகம்கவி, பூச்சிமுருகன், துறைமுகம் காஜா, நே.சிற்றரசு, ஆர்.டி.சேகர், மாதவரம் எஸ்.சுதர்சனம், மேயர் பிரியா ராஜன், துணை மேயர் மு.மகேஷ்குமார், த.இளைய அருணா எம்.சி., கே.எஸ்.ரவிச்சந்திரன், கோ.வி.லெனின்,

பகுதி கழக செயலாளர்கள் - கே.ஏழுமலை எம்.சி., கோ.சு.மணி, ந.இராமலிங்கம் எம்.சி., க.தனசேகரன் எம்.சி., ச.பரமசிவம், மா.பா.அன்புதுரை, வினோத்வேலாயுதம், எஸ்.மதன்மோகன் எம்.சி., ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் எம்.சி., காரம்பாக்கம் க. கணபதி, அரவிந்த்ரமேஷ், நொளம்பூர் வே.ராஜன், இ.கே.மதியழகன் எம்.சி., எஸ்.வி.ரவிச்சந்தின் எம்.சி., இரா.துரைராஜ் எம்.சி., எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., பாலவாக்கம் விஸ்வநாதன் எம்.சி., கே.கண்ணன் எம்.சி., மு.இராசா எம்.சி., எம்.விநாயகமூர்த்தி, வே.ஆனந்தன் எம்.சி.,

மாநில நிர்வாகிகள் மு. தம்பிதுரை, சி.தசரதன் நந்தனம் சி.நம்பிராஜன், எஸ். மோகன், செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள் சு.வில்லவன் எம்.எஸ். பழனி, செல்விசௌந்தர் ராஜன், மந்தைவெளி அ.பாபு, யோகேஷ்ரவி வேலுசம்மந்தம் ஜெ.ஜானகிராமன் எம்.ஆறுமுகம், அ.வாசுதேவன், ஜி.டி.அம்பேத்கர், மாவட்ட நிர்வாகிகள் மாம்பலம் ஆ.சந்திரசேகர், நந்தனம் வேதா, கோடம்பாக்கம் மு.சத்யா, கே.மலர், என்.அன்பழகன், பகுதி கழக நிர்வாகிகள் ஜி.ராஜேந்திரன், ஏ. பாக்கியம்தாஸ் அகல்ய விஸ்வநாதன் ஆர்.எல். வி.அசோக்குமார், ஜி.முருகையன், வட்ட கழக செயலாளர்கள் டி.ராஜவேலு சீ.கிருஷ்ணமூர்த்தி ராஜா சுரேஷ்குமார் அ.நாகராஜன் மு.இ.ஏழுமலை மு. இராஜேந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் விமலா கிருஷ்ணமூர்த்தி எம்.சி., அ.ரேவதி எம்.சி., மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.ராஜி, மு.உதயசூரியன், வி. அருண்குமார், என்.வி. லோகநாதன், தா. வின்சென்ட், எம்.ஜெயகோபி, டி.மோகன்தாஸ், ஆர். ரமேஷ், தென்றல் வி.விஜய், ஏ.கலைசேகரன் திலீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துக்கின்றனர்.

124-அ வட்ட கழக பொறுப்பாளர் மா.பா. அன்பு நன்றி கூறுகிறார்.

---

### கனிமொழி கருணாநிதி எம்.பி. முன்னிலை! அன்வர் ராஜா தலைமை!

# தி.மு.க. தலைமை இலக்கிய அணி ஆலோசனைக் கூட்டம்!

## இணைச் செயலாளர் நந்தனம் ச.நம்பிராஜன் அறிவிப்பு!

சென்னை, ஆக.28-

தி.மு.க. தலைமை இலக்கிய அணி இணைச் செயலாளர் நந்தனம் ச.நம்பிராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழக துணைப் பொது செயலாளர் கனிமொழி கருணாநிதி முன்னிலை வகிக்கிறார். இலக்கிய அணி தலைவர் அன்வர் ராஜா தலைமை வகிக்கிறார்.

எல்லோருக்கும் எல்லாம் என்னும் திராவிட மாடல் ஆட்சியின் கழகத் தலைவர் தளபதியாரின் வழியில் கழக முப்பெரும் விழா இவ்வாண்டு பட்டி தொட்டி எங்கும் சிறப்புடன் விழாக்கோலம் பூண்டிட கழக இலக்கிய அணி சார்பில் ஆலோசனைக் கூட்டம் இன்று (28.8.2026 - வெள்ளிக்கிழமை) காலை 10.30 மணி அளவில் அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தலைமை இலக்கிய அணி நிர்வாகிகள் மற்றும் மாவட்டக் கழக இலக்கிய அணி அமைப்பாளர்கள் அனைவரும் அவசியம் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

### சமையல் எரிவாயு சிலிண்டருக்கான இ.கே.ஒய்.சி. காலக்கெடு முடிவதால்

# சமையல் எரிவாயு முகமைகளில் குவிந்த மக்கள்!

சென்னை, ஆக. 28-

சமையல் எரிவாயு சிலிண்டருக்கான இகே ஒய்சி சரிபார்ப்பு செய்வதற்கான காலக்கெடு முடிய உள்ளதால் எரிவாயு முகமைகளில் மக்கள் குவிந்து வருகின்றனர் எல்பிஜி எரிவாயு சிலிண்டர்களைப் பயன்படுத்தும் கோடிக்கணக்கான நுகர்வோருக்கு இது மிக முக்கியமான செய்தியாகும். வீட்டு எரிவாயு இணைப்புகளுக்கான ஆதார் அடிப்படையிலான இகேஒய்சி (EKYC) காலக்கெடு ஆகஸ்ட் 31ம் தேதியுடன் முடிவடைய உள்ளது.

கால கெடு நெருங்கி வருவதால், பயோமெட்ரிக் பதிவு செய்யாத நுகர்வோர் அந்தந்த எரிவாயு முகமைகளில் குவிந்து வருகின்றனர். ஆனால், இகேஒய்சி செயல்முறையின் முதல் கட்டமான ஆதார் எண்ணை 14 இலக்க எல்பிஜி (LPG) அடையாள எண்ணுடன் இணைப்பதிலேயே சில நுகர்வோருக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொது மக்கள் கூறியதாவது: சில மாதங்களுக்கு முன்பு எரிவாயு முகமையைத் தொடர்புகொண்டேன். என்னால் அதிக தூரம் பயணம் செய்ய முடியாது என்பதால், வீட்டுக்கே ஒருவர் வந்து பயோமெட்ரிக் பதிவு செய்வார் என்று கூறினர். ஆனால் யாரும் வரவில்லை. பின்னர் வீட்டிலிருந்தே இந்தப் பணியை மேற்கொள்ள முயன்றும் முடியவில்லை. முகமை வழங்கிய ரசீதில் அச்சிடப்பட்டிருந்த எல்பிஜி அடையாள எண்ணும் தவறாக இருந்தது.

இறுதியில், இணையதளத்தில் பதிவு செய்யப்பட்ட மொபைல் எண்ணை அளித்து சரியான எல்பிஜி அடையாள எண்ணை கண்டறிந்தேன். இதுபோல், வேறு பகுதிகளுக்கு குடிபெயர்ந்து எரிவாயு முகமையை மாற்றிய நுகர்வோரும் இகேஒய்சி நடைமுறையை நிறைவு செய்வதில் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.




தாம்பரம் மாநகராட்சி டி.டி.கே நகரில் கழக ஆட்சியில் கொண்டுவரப்பட்டு வேகமாக நடைபெற்ற வந்த மழைநீர் கால்வாய் பணிகள் தற்போது ஆட்சி மாற்றத்திற்கு பிறகு கால்வாய் பணிகள் நடைபெறுவில்லை மழை காலம் நெருங்கி வருவதால் குடியிருப்போர் நலசங்கத்தினர் மற்றும் பொது மக்கள் தாம்பரம் மாநகர செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா அவர்களிடம் புகார் கூறியதை தொடர்ந்து அந்த இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டு சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு மழைக்கு முன்பு பணிகளை முறைப்படுத்த கேட்டுக் கொண்டார். உடன் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, 4–வது மண்டல குழுத்தலைவர் – பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளர் டி.காமராஜ்,மாமன்ற உறுப்பினர் டி.ஆர்.கோபி,மாநகர அமைப்பாளர்கள் எஸ்.ஜி.கருணாகரபாண்டியன்,இரா.இரத்தினகுமார் மற்றும் குடியிருப்போர் நலசங்க நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் உடனிருந்தனர்.

---

# மக்களின் வயிற்றிலடிக்கும் விலைவாசி உயர்வு!

## தி.மு.க. ஐ.டி.விங் குற்றச்சாட்டு!




தேசிய சராசரியை விட (4.45%) தமிழ்நாட்டின் பணவீக்கம் 5.44% ஆக உயர்ந்துள்ளது. தவெக அரசின் நிர்வாகச் சீர்கேட்டால் எளிய மக்களின் அத்தியாவசியத் தேவைகளின் விலைகள் விண்ணைத் தொடுகின்றன.

விளம்பரங்களில் மட்டுமே கவனம் செலுத்தும் தவெக அரசு, மக்கள் சந்திக்கும் இந்த உண்மையான பொருளாதார நெருக்கடியைக் கண்டுகொள்ளாமல் கண்மூடி மௌனமாக இருக்கிறது!

---

# பத்திரிகையாளர் - எழுத்தாளர் ந.வினோத் குமார் மறைவு!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. இரங்கல்!

சென்னை,ஆக.28-

பத்திரிகையாளரும், எழுத்தாளருமான ந.வினோத் குமார் அவர்கள் நேற்று இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



இச்செய்தியறிந்து கனிமொழி கருணாநிதி எம்.பி. ட்விட்டர் பதிவு வருமாறு:

பத்திரிகையாளரும் எழுத்தாளருமான திரு. ந.வினோத் குமார் அவர்கள் மறைவெய்திய செய்தி வருத்தமளிக்கிறது.

தமிழரசு இதழில் வெளிவந்த தலைவர் கலைஞர் அவர்களின் சிந்தனைகளையும் சாதனைகளையும் முக்கிய நூலாகத் தொகுத்தவர். அவரது திராவிட இயக்க வரலாறு தொடர்பான படைப்புகள் முக்கியமானவை.

அவரது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கல்.


இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.டி.எஸ். மணி

**ஆகஸ்ட் 28 (1993)**



செங்கல்பட்டு மாவட்டத்தின் தி.மு.க. முன்னோடிகளில் ஒருவர். தி.மு.க. நடத்திய பல போராட்டங்களில் பங்கு கொண்டு சிறை சென்றவர்.

செங்கல்பட்டு மாவட்டக் கழகச் செயலாளராகவும் காஞ்சிபுரம் நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றியவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.